மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.10/2024

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பஞ்சவர்ணம் (Dw1) | த/பெ. | : | வீரன் |
| ஊர் | : | எம்.கே.நகர் இராமேஸ்வரம் | வயது | : | 62 |
| சமயம் | : | இந்து | தொழில் | : | கூலி |

நாள். 07.03.2026
பி.வா.சா. 1
**வாதிதரப்பு குறுக்கு விசாரணை :–**

1. நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் எம்.கே.நகர் ஆகும். எம்.கே.நகரின் முழு விரிவாக்கம் என்ன என்றால் இடத்தின் உரிமையாளர் கருப்பையா என்பவரின் பெயர். நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் 13/56 ஆகும். எனது தகப்பனாருக்கு எத்தனை மக்கள் என்றால் 4 ஆண் நபர்கள். நான், ஆறுமுகம், சேகர்(வாதி), சுப்பிரமணி ஆகியோர்கள். எங்களுக்கு பூர்வீகமான சொந்த ஊர் எது என்றால் அருப்புக்கோட்டை தாலுகா, வீரசோழன் அருகில் உள்ள மேலபருத்தியூர். மேலபருத்தியூர் கிராமத்தில் இருந்து இராமேஸ்வரத்திற்கு எப்போது வந்தீர்கள் என்றால் நான் சிறுவயதிலேயே வந்துவிட்டேன்.

2. கடற்கரையில் உள்ள மீன் கம்பெனியில் இருந்து கூலி வேலை பார்த்து அங்கேயே தங்கி வந்தேன். எம்.கே.நகரில் இருந்து கடற்கரை கம்பெனி எவ்வளவு துாரம் உள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியாது. ஆனால் தினந்தோறும் பேருந்து அல்லது ஆட்டோவில் சென்று வருகிறேன். சுமார் 5 நிமிடத்தில் பேருந்து சென்றுவிடும். பேருந்துநிலையத்தில் இருந்து கிளம்பி பொந்தபுளி, இலட்சுமண தீர்த்தம், இராமர்தீர்த்தம், திட்டக்குடி, மார்க்கெட், 6ம் நம்பர் லைன் வழியாக கடற்கரை கம்பெனி வருவேன். வாதி சேகர் ஏற்கனவே ஒரு வழக்கு உம்மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு எண் ஓ.எஸ்.5/2013 என்றால் சரிதான். அந்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது. மேற்கண்ட தள்ளுபடி உத்தரவை படித்துப்பார்தேனா என்றால் படித்துப்பார்க்கவில்லை. அதனால் அதில் உள்ள விபரங்கள் தெரியாது என்றால் சரிதான்.

3. நான் குடும்பமாக 1991ல் இருந்து எம்.கே. நகரில் குடியிருந்து

வருகிறேன். இராமேஸ்வரம் லெட்சுநகர், பெரியார் நகரில் எனது பெயருக்கு அரசு இலவச பட்டா வழக்கியுள்ளார்கள் என்றால் சரிதான். அப்போது அந்த பகுதியில் குடியிருந்த அனைவருக்கும் அரசு இலவச பட்டா வழங்கினார்கள் என்றால் சரிதான். அந்த பட்டா எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் ஆண்டு தெரியவில்லை பட்டா எண் 7 ஆகும். பட்டா வழங்கிய தனிவட்டாட்சியர் கஸ்தூரிரங்கன் 30.04.1994 ல் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். அதன் புல எண் 405/1 ஆகும். எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் நான் சொல்லியதுதான்.

4. நிரூபண வாக்குமூலம் பாரா எண் 6 ல் மணி என்பவர் வேறு நபர்களுக்கு கிரையம் செய்ய முற்பட்டதால் நானும், எனது தந்தையும் கிரையம் முடித்துக்கொண்டோம் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். எந்த வருடம் எந்த மாதம் எந்த தேதியில் கிரையம் முடித்தீர்கள் என்பது பற்றி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை அந்த ஆவணம் களவுபோய்விட்டது. களவு போனது சம்பந்தமாக புகார் ஏதும் கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகாருக்கு ரசீது கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. நான் கேட்கவும் இல்லை. அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி கிரைய ஆவணம் பத்திர அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்படவில்லை. எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினீர்கள் என்ற விபரம் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் இல்லை என்றால் சரிதான். நானும், எனது தகப்பனாரும் அவ்வாறு கிரையம் பெறவில்லை என்றாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. எனது உடன்பிறந்த சகோதரர் ஆறுமுகம் இராமேஸ்வரத்திற்கு எந்த ஆண்டு வந்தார் என்றால் அவர் இராமேஸ்வரம் வரவே இல்லை. மதுரை தள்ளுமேட்டில் குடியிருந்து வருகிறார். பத்தி 7 ல் என் உடன்பிறந்த சகோதரர் ஆறுமுகம் இராமேஸ்வரத்தில் வேறு ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறார் என்றால் அது தவறு. அதுபோல் எனது மனைவி பஞ்சு 30.03.2024 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது மனைவி மேலபருத்தியூரில் இருந்து கமுதி செல்லும் வழியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் எம்.கே.நகர் கமுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி சேகர் என்ன வேலை செய்கிறார் என்றால் காந்தி என்பவரின் சங்கு கம்பெனியில் வேலை செய்கிறார். எனது பெயரில் உள்ள பட்டாவின் சர்வே எண் என்னவென்றால் ஞாபகமில்லை.

6. நீதிமன்றத்தில் ஒ.எஸ்.எண் 5/2013 ல் வழங்கப்பட்ட தீர்ப்பு மற்றும்

தீர்ப்பாணையின்படி மணி என்பவர் பெயரில் உள்ள இலவச பட்டா ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும்போது மணி பெயரில் இருந்து எனது பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய இராமேஸ்வரம் வட்டாட்சியருக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் நான் படித்து பார்க்கவில்லை. வழக்கை படித்துப்பார்க்காமல்தான் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது பெயரில் ஏற்கனவே இராமேஸ்வரம் பெரியார் நகரில் இலவச பட்டா இருந்த காரணத்தினால்தான் நீதிமன்றம் இரத்து செய்த பட்டாவை மோசடியாக பயன்படுத்தி பி.வா.சா.ஆ.1 ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

7. அதனால்தான் எனது பெயரில் பெரியார் நகரில் இலவச பட்டா இருப்பதால்தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது மனைவி பஞ்சு பெயரில் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் சர்வே எண்ணும், பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள சர்வே எண்ணும் வேறு வேறாக உள்ளது என்றால் சரிதான். வாதியின் வழக்குப்படி மணியின் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்தபின்னர் தனி வட்டாட்சியர், இராமநாதபுரம் அவர்களின் உத்தரவை பெற்று சேகர் பெயருக்கு தனிவட்டாட்சியர் பட்டா வழங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இராமேஸ்வரம் எம்.கே.நகருக்கு பட்டா வழங்குவதற்கு இராமேஸ்வரம் தனிவட்டாட்சியருக்கு மட்டும்தான் அதிகாரம் உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி, சோனை மகன் மணி என்பவரிடம் அவரின் அதிகாரம் பெற்ற பஞ்சவர்ணம் என்பவரிடம் இருந்து தனிக்கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தனிக்கிரையம் அரசு வழங்கிய அசைன்மெண்ட் பட்டாவில் உள்ள நிபந்தனைகளை மீறி இருந்ததால் சமூகம் நீதிமன்றம் ஒ.எஸ்.5/2013 என்ற வழக்கில் சேகர் வாங்கிய கிரையம் செல்லாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அந்த வீட்டில் குடியிருப்பதற்கான ஆவணங்களை தனிவட்டாட்சியரிடம் சமர்ப்பித்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைகளை சமர்பித்து வாதி தனது பெயருக்கு தனிப்பட்டா பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8. வாதிக்கு இராமேஸ்வரத்தில் வேறு பட்டா இடம் ஏதும் இல்லை என்றால் சரிதான். வாதி பெயரில் வழங்கப்பட்டுள்ள பட்டாவில் கண்ட இடத்தில் இருந்து நான் சட்டப்படி காலி செய்ய கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தற்சமயம் வாதி எம்.கே.நகரில் எஸ். முருகன் என்பவரின் வீட்டில் வாடகைக்குத்தான் இருந்து வருகிறார் என்றால் அந்த இடத்தை கிரையம் முடித்தாக கேள்விப்பட்டேன். அது தனிவட்டாட்சியர் கொடுத்த பட்டா என்பதால் ஒரு நபர் மற்றொரு நபருக்கு கிரையம்

கொடுக்க முடியாது என்றால் அது பற்றி எனக்கு விபரம் தெரியாது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

SUJITH Digitally signed by SUJITH
Date: 2026.03.07 16:51:37 +0530